காரணத்தால், அவர்கள் நூல் வாங்கமுடியாத நிலையில் நெசவுத் தொழிலைச் செய்யமுடியாத காரணத்தால், இன்று அவர்கள் கிளர்ச்சியிலே ஈடுபட வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

இன்று குறிப்பாக நம்முடைய தமிழகத்திலே அரசாங்கம் எடுத்துக் கொண்ட மில்கள் மூலமாகவும் கூட்டுறவு நூற்பாலைகள் மூலமாகவும் ஏறக் குறைய மாதம் 8,000 பேல்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. நமக்கு கைத்தறிக்குத் தேவையான அளவோ 16 ஆயிரம் பேல்கள் ஆகும். எனவே கூட்டுறவுத் துறையின் மூலமாகவும் அரசு எடுத்துக்கொண்ட நூற்பாலைகளின் மூலமாகவும் உற்பத்தி செய்கின்ற நூலையாவது கைத்தறியாளர்களுக்கு நியாய மான விலைக்குக் கொடுத்திருந்தால்கூட இப்படிப்பட்ட கொந்தளிப்பான நிலைமைகள் ஏற்படாமல் தடுத்திருக்கமுடியும். ஆனால் இன்றைக்கு ஆலை முதலாளிகள் கொடுக்கக்கூடிய நூலின் விலை ஒன்றிற்கு இரண்டு மடங்கு விலைவைத்துக் கொடுக்கப்படுகிறது. அது மட்டுமல்ல, சர்க்கார் எடுத்துக் கொண்ட மில்களிலிருந்தும், கூட்டுறவு நூற்பாலைகளிலிருந்தும் கொடுக்கப் படுகின்ற நூல்கூட அவர்களுக்கு நியாயமான விலைக்குக் கிடைக்கவில்லை. இந்த நிலையில் அரசாங்கம் எடுத்திருக்கின்ற மில்களிலேயும் கூட்டுறவுத் துறை யிலேயும் உற்பத்தியாகின்ற நூலை அவர்களுக்கு நியாயமான விலைக்குக் கிடைக்கச் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும்.

தனியார் துறையிலிருந்தும் போதுமான அளவிற்கு நியாயமான விலைக்குப் பெற்றுத் தருவதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்கவேண்டும். மத்திய அரசாங்கம்கூட நூல் விலையைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப் போவதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். என்ன நடவடிக்கை எடுத்திருக் கிறது என்று தெரியவில்லை. முன்பொரு தடவை கைத்தறியாளர்கள் எல்லாம் வாழ்வதற்கு வழியில்லை என்ற நிலையில் அவர்கள் பிச்சையெடுக்க வேண்டிய நிலைக்குப் போளக்கொண்டிருந்தார்களே, அப்படிப்பட்ட நிலைமைதான் இன்றைக்கும் தோன்றியிருக்கிறது. இந்த அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம் என்று சொன்னாலும்கூட இப்பொழுது மிகப் பெரிய நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. அந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கின்றவர்கள் பசியாலே வாடிக்கொண்டிருக்கின்றார்கள் என்ற அவசரமான முக்கியமான விஷயத்தைப் பற்றி விவாதிப்பதற்கு இந்த அவையை ஒத்திவைக்கவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே. உணவுக்கு அடுத்த படியாக இருக்கின்ற நெசவுத் தொழிலுக்கு ஒரு பாதகமான நிலை ஏற்பட் டிருக்கிறது. குறிப்பாக சேலம் பகுதியிலே உள்ள நெசவாளர்கள் எல்லாம்